மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி நேரம் முடிவடைகிறது. இன்னும் 8 வினாக்கள் இருக்கின்றன. அவைகளை அச்சடித்து உறுப்பினர்களுக்கு வழங்கிவிடலாமா? ஏறத்தாழ 400-500 கேள்விகள் இருக்கின்றன. 30 வினாக்கள் என்று வைத்துக் கொண்டால் அது முடிவதில்லை. ஒரு நாளைக்கு 20 கேள்வி தான் என்று வரம்பு வைத்துக்கொண்டாக வேண்டும்.

திருமதி த. ந. அனந்தநாயகி : கேள்வி நேரத்தை எக்ஸ்டெண்ட் செய்யலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதிலே தலைவர்களின் கருத்தை அறிய விரும்புகிறேன்.

THIRU R. PONNAPPA NADAR: We can extend the question hour by 10 minutes.

"சுஜாதா" வகைப் பருத்தி சாகுபடி

*** 118 வினா—திரு. கே. என். குமாரசாமி** : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் சுஜாதா என்கிற ஒரு வகை பருத்தி பயிரிட வேண்டும் என்று விவசாயிகளுக்கு அரசாங்கத்தின் மூலம் பிரச்சாரம் செய்யப்பட்டதா ?

(இ) ஆம் என்றால், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) ஆம்.

(இ) சுஜாதா என்ற ரகப்பருத்தி 1969–70-ம் ஆண்டில் 25 ஏக்கரில் மட்டும் சாகுபடி செய்யப்பட்டது. இந்த ரகப்பருத்தி 90-100-ம் எண் நூற்புத்திறன் உடையதால் சிறந்த மிகு இழையுள்ள பருத்தியாகும். இதனை அதிக அளவு பரப்பளவில் பயிரிட விவசாயிகளுக்கு போதிய ஊக்கம் அளிக்க மத்திய அரசு ஒரு திட்டத்தை மேற்கொண்டு நடத்த நடவடிக்கை எடுத்துள்ளது. இதன்படி சுஜாதா ரகப்பருத்தி பயிரிட பூச்சி கொல்லி மருந்துக்கு 50 சதவீதம் மான்யம் அளிக்கப்படுகிறது. 1970–71-ல் தமிழ்நாட்டில் கோவை, பொள்ளாச்சி, மற்றும் அவினாசிப்பகுதியில் 1,000 ஏக்கர் பரப்பளவில் இப்பருத்தி பயிர் செய்யப்பட்டது. 1971–72-ல் சுமார் 2,000 ஏக்கர் பரப்பளவில் இப்பருத்தியை பயிர்செய்ய உத்தேசிக்கப் பட்டுள்ளது. அகில இந்திய வானொலிமூலமும், முன்னேற்ற பருத்தி விவசாயிகளின் நிலங்களில் இப்பருத்தி பயிர் செய்யப் பட்டதால் ஏற்பட்ட முன்னேற்றங்கள், தன்மைகள் ஆகியவை பற்றி விவாதம் நிகழ்த்துவதன் வாயிலாகவும் இப்பருத்தியின் சாகுபடி பரப்பளவை மேலும் அதிகமாக்க விரிவாக விளம்பரம் செய்யப்பட்டது.

1971 டிசம்பர் 6]

திரு. கே. என். குமாரசாமி : தலைவரவர்களே, இந்த சுஜாதா பருத்தி அதிகமான மகசூலைத் தருகிறது என்ற காரணத்தால் விவசாயிகள் சுஜாதா பருத்தியை மிக அதிகமாகப்போடுகிறார்கள். ஆனால் குறைந்தது பூச்சி கொல்லி மருந்துக்காக 50 சதவீதம் சப்சிடி கொடுப்பதாக சொன்னார்கள். ஆனால் 33 சதவீதம் கூட கொடுக்காமல் இருப்பதால் விவசாயிகள் அதிகப்படியான விலை கொடுத்து அதை வாங்கவேண்டியிருக்கிறது. அதே நேரத்தில் பருத்தியின் விலையும் குறைந்து கொண்டே போகிறது. ஆகவே, இந்த நிலைமையைப் பரிசீலனை செய்து, அரசாங்கம் அதற்கு அதிகப்படியான விலையைக் கொடுப்பதற்கும், பெர்டிலைசருக்காக 33 சதவீதம் சப்சிடி கொடுப்பதற்கும் வாய்ப்பை ஏற்படுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, செவின் கோயம்புத்தூர் மாவட்டத்திற்குத் தேவைப்படுகிறது. உள்நாட்டு செவின்தான் கொடுக்கமுடியும். வெளிநாட்டு செவின் கொடுக்கமுடியாத நிலை இருக்கிறது. இது சம்பந்தமாக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஒரு உத்தரவு போட்டு விட்டுச்சென்று இருக்கிறார்கள். மறுபடியும் அவர்கள் வந்ததற்குப்பிறகு இதைப் பற்றி பரிசீலிக்கப்படும்.

திரு. சு. துரைசாமி : பேரவைத் தலைவரவர்களே, நம்முடைய நாட்டுக்கு பருத்தி பற்றாக்குறை இருக்கிறது. அதைத் தீர்க்கும் முறையில் இந்த சுஜாதா பருத்தியை பயிரிட்டால் நன்றாக இருக்கும். இதற்குத் தேவைப்படும் செவின், மற்றும் காம்பொனென்ட்ஸ் கிடைக்கும்படி செய்ய அரசாங்கம் தேவைப்பட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா, ஏதாவது நடவடிக்கை எடுத்து இருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : முதல்வர் அவர்கள் வந்ததற்குப் பிறகு சொல்லலாம் என்று சொன்னேன். முதல்வர் அவர்கள் வந்துவிட்டார்கள். அதுபற்றிப் பரிசீலிக்கப்படும்.

Cold Storage Unit for Hosur Taluk.

* 119 Q.—THIRU B. VENKATASWAMY : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) whether there is any proposal to construct a cold storage unit for storing potatoes and vegetables in Hosur Taluk in Dharmapuri district; and

(b) if so, when it will be constructed?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

THIRU B. VENKATASWAMY : Sir, we are importing potatoes from Simla to the tune of three to four lakhs of rupees per year by paying abnormal rates. If we construct a cold storage